## கோலாலம்பூர் மொத்த விலை சந்தையில் அதிரடிச் சோதனை;

# அந்நியர்களின் வர்த்தக பொருட்களை மாநகர் மன்றம் பறிமுதல் செய்தது!



**(நமது நிருபர்)**

பெட்டாலிங் ஜெயா, அக்.26– கோலாலம்பூர் மொத்த விலை சந்தையில் அந்நியர்களின் விற்பனை பொருட்களைப் பறிமுதல் செய்வதில் 5 நடவடிக்கைகளை கோலாலம்பூர் மாநகர் மன்றம் மேற்கொண்டது.

இந்நடவடிக்கை 1974 சாலை, வடிகால் மற்றும் கட்டடச் சட்டம், 2016 சிறு வணிகர்களுக்கான உரிமச் சட்டம் (கோலாலம்பூர் கூட்டரசு பிரதேசம்) ஆகியவற்றின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

பறிமுதல் செய்யப்பட்ட அனைத்துப் பொருட்களும் பதிவு மற்றும் ஆவணமாக்கல் நடவடிக்கைகளுக்காக கோலாலம்பூர், செராஸ் தாமான் மிஹார்ஜாவிலுள்ள பறிமுதல் கிடங்கிற்குக் கொண்டு செல்லப்பட்டதாக ஓர் அறிக்கையில் மாநகர் மன்றம் குறிப்பிட்டது.